**(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2015 இல் பக்கம் 16 - 20 வரையுள்ள அவைத் தலைவரின் செய்தியின் தமிழ் மொழிபெயர்ப்பு)**

**அவைத் தலைவரின் செய்தி**

இயக்குநர் சபை சார்பாக உங்கள் அனைவரையும் 14வது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு அழைப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இக்கூட்டத்தில் 2015 ஆம் ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கின்றேன். இவ்வருடம் நிறுவன பிரிப்பாட்டிற்கு பின்பு சவால்களை ஏற்படுத்திய முதலாவது வருடமாகும்.

**பொருளாதாரம்**

2010 ஆம் ஆண்டு மீளமைவு செய்யப்பட்ட இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015 ஆம் ஆண்டு 5.5% இனால் வளர்ச்சியடைந்துள்ளது என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சியானது கைத்தொழில் துறையின் முன்னேற்றம் மற்றும் விவசாயத்துறையின் சாதகமான செயற்திறன் என்பவற்றோடும் நெல் உற்பத்தி துறையின் பிரதான வளர்ச்சி மற்றும் சேவைகள் துறையின் மிதமான வளர்ச்சியினதும் பெறுபேறாகும்.

உலகப் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட பின்னடைவு காரணமாக இலங்கை மத்திய வங்கி அபிவிருத்தி மற்றும் விரிவாக்கம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு வட்டி வீதத்தை மிகக்குறைந்த மட்டத்தில் வைத்துக்கொள்வதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டது. எவ்வாறாயினும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு மிதமிஞ்சிய நட்டத்தைத் தடுக்கும் பொருட்டு இலங்கை மத்திய வங்கி 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் தனது நிதிக் கொள்கையை இறுக்கமாக்கியது. இவ்வகையில் 2012 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் இருந்து அமுல்படுத்திய நிதிக் கொள்கையை உள்வாங்கக் கூடியதாக இருந்தது.

CCPI யின் வருடாந்த பணவீக்க சராசரி 1% க்கு குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது பிரதானமாக சர்வதேச விலை மாற்றங்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் ஏற்படுத்தப்பட்ட கீழ்நோக்கிய ஒழுங்கமைப்பு மற்றும் சாதகமான விநியோக நிபந்தனைகள் என்பவற்றின் விளைவாகும்.

அரச துறை ஊழியர்களின் சம்பளத்தினை அதிகரிக்க வேண்டுமென்ற அரசின் முடிவானது பொதுத் துறையின் வருமான செலவழிப்பு உயர்வடைய காரணமாகியுள்ளது. இதனுடன் குறைந்த மட்ட கடன் நிபந்தனைகள் பிரதானமாக வாகன இறக்குமதிக்கு வழிசெய்தது. இவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பொதுக்காப்புறுதி மற்றும் ஆயுள் காப்புறுதிக்கான கேள்வியும் அதிகரித்தது. அரசாங்கம் கார்த்திகை மாதம் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் வியாபாரத்துறையில் பல்வேறு ஊக்குவிப்புக்களை அறிமுகப்படுத்தியது. விசேடமாக உற்பத்தி மற்றும் கைத்தொழில்துறை என்பவற்றை விரிவாக்குவதற்கும் அத்துறைகள் கடல் கடந்து தங்களை மேம்படுத்திக்கொள்வதற்கும் இவ் ஊக்குவிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அனைத்து துறைகளையும் உலக ரீதியில் அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிப்பதன் காரணமாக சேவைத்துறையும் இவ் ஊக்குவிப்புக்கள் மூலம் நன்மையடையும். எனினும் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளின் முழுமையான பயன்களை உச்ச அளவில் அடைவதற்கு அரசாங்கம் தூர நோக்குடைய ஒரே வகையான நிலையான அபிவிருத்தியுடன் கூடிய கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும்.

**காப்புறுதித்துறை**

காப்புறுதித்துறை இவ்வருட காலப்பகுதியில் மிதமான வளர்ச்சியைக் கண்டது. ஆயுள் காப்புறுதித்துறை வளர்ச்சி 20% இனாலும் பொதுக் காப்புறுதித்துறை வளர்ச்சி 15% இனாலும் அதிகரித்தது. காப்புறுதித் துறையில கட்டுப்பணத்தின் மூலம் பெற்ற முழுமையான வருமானம் ரூபா 120 பில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது முறையே ஆயுள் காப்புறுதித்

துறையில் ரூபா 67 பில்லியனும் பொதுக் காப்புறுதித் துறையில் ரூபா 53 பில்லியனுமாக உள்ளது. சில நிறுவனங்கள் பாரியளவு சந்தைப் பங்குகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அதேவேளை சிறிய நிறுவனங்கள் குறிப்பாக தனித்தன்மை வாய்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளை முன்னிலைப்படுத்தப்பட்ட வலையமைப்புக்கள் ஊடாக வழங்கி தம்மை சந்தையில் நிலைநிறுத்திக் கொண்டுள்ளன. எவ்வாறாயினும் 2015 ஆம் ஆண்டின் வருமான செலவழிப்பு மட்டம் உயரியதாக இருந்த போதிலும் காப்புறுதித்துறையின் ஊடுருவல் தொடர்ச்சியாக 1% ஆகவே இருந்துள்ளது. இது குறிப்பிட்ட சில காலமாக இதே மட்டத்தில் இருந்து வருகின்றது. இது ஆசிய வலயத்தில் காணப்படும் 5.4% மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் சராசரியான 6% உடன் ஒப்பிடும் போது பாரிய பின்னடைவு ஆகும். பொதுமக்களிடையே காப்புறுதித் துறையின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வு போதியளவில் இல்லாமையே இத்துறையின் பின்னடைவுக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. எனினும் இத்துறை காப்புறுதி ஒழுங்கமைப்பாளர் மற்றும் இலங்கை காப்புறுதிச் சபையுடன் இணைந்து பொது மக்களிடையே காப்புறுதித்துறை நன்மை பற்றிய விரிவான விழிப்புணர்வையும், காப்புறுதித் துறையில் இருந்து கிடைக்கும் அனுகூலங்களையும் பற்றி அறிவூட்டுவதற்கு சில நடவடிக்கைகளை நாடு பூராகவும் முன்னெடுத்துள்ளது. இது எதிர்காலத்தில் சாதகமான பெறுபேறுகளை வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

**ஒழுங்கமைத்தல் கட்டமைப்பு**

இலங்கை காப்புறுதிச் சபையின் மூலமாக காப்புறுதித் துறைக்கு அண்மைக்காலத்தில் பல புதிய விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருவதன் காரணமாக காப்புறுதித் துறையின் ஒழுங்கமைப்பு மிகவும் கடினமாகவுள்ளது. 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க காப்புறுதித் துறை திருத்த சட்டத்தின் ஒழுங்கமைப்பு நிபந்தனைகளுக்கு அமைவாக அனைத்துக் காப்புறுதி நிறுவனங்களும் 2015 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து தமது ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டையும் வெவ்வேறாகப் பிரித்துக் கொள்ளுமாறு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. இது காப்புறுதித்துறையில் நல்லாட்சியுடன் கூடிய வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்கும் வாடிக்கையாளர்களின் வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவதானம் கொடுக்கும் வகையிலும் இத்தேவைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காப்புறுதி ஒழுங்கமைப்பாளரால் வழங்கப்பட்ட நேர வரையறைக்குள் HNB அசூரன்ஸ் தனது ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளை வேறுபடுத்திக் கொண்டது. எனினும் பாரிய காப்புறுதித் துறை நிறுவனங்கள் உட்பட சில நிறுவனங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. அத்துடன் ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகளுடன் இணங்கி நடப்பதில் ஏற்படுகின்ற நீண்டகால தாமதம் இருவகைப்பட்ட வர்த்தகத்துறையிலும் ஒரு வெளிப்படைத் தன்மையை உருவாக்கும் நோக்கத்தை குறைத்து மதிப்பிடுவதாக அமைவதுடன் மேலும் பல சவால்களையும் அதியுயர் செலவுகளையும் எதிர்நோக்கி இவ்வொழுங்கு விதிகளுக்கு இணங்கி நடக்கின்ற நிறுவனங்களுக்கு நியாயமற்ற அனுகூலங்களை வழங்குவதாகவும் உள்ளது.

இலங்கை காப்புறுதிச் சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட இடர் முதலீட்டுக் கட்டமைப்பு அனைத்துக் கடன்களையும் தீர்க்கும் எல்லை விதிகளுக்கு மாற்றமடைந்து 2016 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது. இது காப்புறுதியாளர்களினால் எதிர்நோக்கப்படும் இடர்கள் தொடர்பாக அவர்களுக்கு போதுமான அளவு முதலீட்டு மட்டங்களை வலுப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது. இந்தக் கட்டமைப்பை சகல காப்புறுதியாளர்களும் ஏற்றுக்கொள்வது முக்கியமான நிபந்தனையாகும். எம்நிறுவனம் மேலே குறிப்பிட்ட இவ்வொழுங்கமைப்பு விதிகளை கடந்த இரண்டு வருடங்களாக பின்பற்றி வெற்றி கண்டுள்ளது என்பதைக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

2015 ஆம் ஆண்டின் முடிவின் போது சகல காப்புறுதி நிறுவனங்களும் தமது நிறுவனங்களை அட்டவணைப்படுத்த வேண்டும் என்ற இலங்கை காப்புறுதிச் சபையின் தேவைப்பாடு நீடிக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் தமது வர்த்தகத்தை வேறுபடுத்தியதில் இருந்து மூன்று வருட காலப்பகுதிக்குள் அட்டவணைப்படுத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகையால் இந்நிறுவனம் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்துடன் இணைந்து இவ்வருடம் இதனை அட்டவணைப்படுத்தவில்லை. ஆயினும் 2017 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்பதாக பொருத்தமான சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கி இந்நிறுவனம் தன்னை அட்டவணைப்படுத்தும் என்பதை நான் அறிவிக்கின்றேன்.

**செயற்திறன்**

மிகவும் போட்டிமிக்க வர்த்தகச் சூழ்நிலைக்கு எதிராக செயற்திட்ட வருடத்தின் பிற்பாதியில் இக்கம்பனி 2015 ஆம் ஆண்டு 17% இணைந்த வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது கடந்த வருட கட்டுப்பண வருமானம் ரூபா 4.6 பில்லியனாக இருந்ததுதுடன் இவ்வருடம் இது 5.4 பில்லியனாக அதிகரித்துள்ளது. ஆயுள் காப்புறுதித் துறை ரூபா 2.8 பில்லியனை மொத்த எழுதப்பட்ட கட்டுப்பணம் ஆக பதிவு செய்து கடந்த வருடத்தில் கட்டுப்பண வருமானம் 19% ஆக வளர்ச்சியடைந்துள்ளது. கைத்தொழில்துறையோடு இணங்கிப் போகக்கூடிய வகையில் வளர்ச்சி வீதம் 3% ஆல் அதிகரித்துள்ளது. நிறுவனம் அறக்கட்டளை வியாபாரத்திறகு மிகவும் அவதானம் வழங்குவதோடு, மொத்தக் கட்டுப்பண வருமானமாக ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் 83% ஐ பதிவு செய்துள்ளது. புதிய ஆயுள் காப்புறுதி விற்பனையில் நிறுவனம் 32% வளர்ச்சியைக் கண்டுள்ளமை ஒரு ஊக்குவிப்பை வழங்குகின்ற விடயமாகக் கருத்தில் கொள்ளப்படுவதோடு, இது எதிர்கால வளர்ச்சிக்கு ஒரு உந்து சக்தியாக அமையும். 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் காப்புறுதிக் கொள்கை புதுப்பித்தல்கள் 21% ஆல் அதிகரித்துள்ளது. மேலும் 2015 ஆம் ஆண்டின் முடிவில் எமது கட்டுப்பண நீடிப்பு விகிதம் 83% ஆல் அதிகரித்துள்ளது. ஆயுள் காப்புறுதி வியாபாரத்துறையில் ஏற்பட்டுள்ள இந்த சாதகமான செயற்திறன் காப்புறுதி நிதியத்தை 27% ஆல் மேலும் வளர்வதற்கு ஊக்குவித்துள்ளது. இது 6.9 பில்லியன் வரை எட்டக்கூடிய அதேவேளையில் கடந்த வருடத்தில் இருந்த ரூபா 228 மில்லியனோடு ஒப்பிடும் போது ரூபா 310 மில்லியன் மொத்த வருமானமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சியின் காரணமாக நிறுவனத்தின் மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 11.6 பில்லியனை அடைந்துள்ளது. முதல் முறையாக இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த சொத்துக்களின் வளர்ச்சி 17% ஆல் அதிகரித்துள்ளது.

HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனமானது இத்துறையை விட ஒரு சிறிய அளவு வளர்ச்சியினை கண்டுள்ளது. அதன் கட்டுப்பண வளர்ச்சி 16% ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுக் காப்புறுதித்துறையின் வளர்ச்சி இத்துறையுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி வீதத்தைக் காட்டிய போதிலும், கடந்த வருடத்தில் நிறுவனத்தினால் அடையப்பட்ட வீதங்களோடு ஒப்படும் போது 9% ஆல் வீழ்ச்சி கண்டுள்ளது. நிறுவனம் ஆரம்பத்தில் வரவு செலவுத் திட்டத்தில் கோரிக்கை செலவு வீதத்தை 65% ஆக எதிர்பார்த்த போதிலும் 2015 ஆம் ஆண்டின் முடிவில் கோரிக்கை வீதம் 88% இனை பதிவு செய்துள்ளது.

எனினும் பல சாதகமான அபிவிருத்திகள் இருந்த போதிலும், நிறுவனத்தின் இலாபத்தைக் கருத்திற் கொள்கையில் பல வருடங்களாக இருந்து வந்த செயற்திறனோடு ஒப்பிடுகின்ற போது மிதமான மட்டத்திலேயே காணபபடுகின்றதிற்கு காரணம் HNBGI யின் செயற்திறன் குறைபாடாகும் சந்தையில் புதிய வாகனங்களின் உட்பிரவேசம் மற்றும் திருத்தங்களுக்கு ஏற்பட்ட பாரியளவு செலவுகள் என்பன HNBGI இல் நட்டத்தை ஏற்படுத்தியது. இது மொத்தப் பெறுபேறுகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து பணிப்பாளர் சபை 2015 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டுப் பகுதியிலிருந்து இத்தகைய பாதகமான நிலைமைகளை ஒழுங்கமைத்து வலுப்படுத்தும் நோக்கில் பல்வேறு வழிவகைகளை மேற்கொண்டதுடன், 2016 ஆம் ஆண்டு செயற்திறனில் ஒரு முன்னேற்றத்தைக் காண்பதற்கு இவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட முன்னெடுப்புக்களின் வளர்ச்சியை மேற்பார்வை செய்வதற்கான செயலமைவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

**பங்குலாம்**

2015 ஆம் ஆண்டின் செயற்திறனை அடிப்படையாக் கொண்டு பணிப்பாளர் சபை இவ்வருடத்தில் ஒரு பங்கிற்கு இரண்டு ரூபாவை முதலும் இறுதியுமான பங்கிலாபமாகப் பிரேரிக்கின்றது.

**கூட்டாண்மைசமூகப் பொறுப்புத் திட்டங்களின் நிலைபேண் தன்மை (உதவி நடவடிக்கைகள்)**

நிறுவனம் சமூகத்தின் மிக முக்கியமான அடிப்படைத் தேவைகளில் ஒன்றான நீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு கிராமப்புறங்களில் உள்ள பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு தொடர்ந்தும் நீர் விநியோகத்தை வழங்கி வருகின்றது. இவ்வருடத்திலும் மல்மடுவ மற்றும் கிம்பிஸ்ஸ ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு தண்ணீர் வசதியை வழங்கியது. 2008 ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டம் இதுவரை 36 தண்ணீர் விநியோகத் திட்டங்களைப் பூர்த்தி செய்துள்ளது. 'பாடசாலையிலிருந்து அலுவலகத்திற்கு' (School to office) என்ற திட்டத்தை முன்னெடுத்து இதன் மூலம் இரண்டாந்தரக் கல்வியைப் பூர்த்தி செய்து வெளியேறும் பாடசாலை மாணவர்களுக்கு தொழிலுக்கான வியாபாரத் துறையில் பிரவேசிப்பதற்கு அவசியமான பயிற்சியை வழங்குகிறது. இத்திட்டம் 03 வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாணவர்களின் செயற்திறன் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த சில மாணவர்களை இந்நிறுவனம் தேர்ந்தெடுத்து வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ளது. நீர்கொழும்பு வைத்தியசாலையில் இரத்த வங்கிக்கு நிதியுதவி, அனாதைப் பிள்ளைகளுக்கு உதவிகள் மற்றும் ஊனமுற்ற பெண்களுக்குத் தேவையான ஊன்றுகோல்களை வழங்குதல் போன்ற பல்வேறுபட்ட விடயங்களையும் நிறுவனம் தனது கூடடாண்மைப் பொறுப்புடைமை நடவடிக்கைகளில் இணைத்துக் கொண்டுள்ளது. இதன்மூலம் சமூகத்தில் அதிஷ்டம் குறைந்த மக்களுக்கு உதவிகளை வழங்கி வருகிறது.

**விருதுகள்**

நிறுவனம் தனது 14 வருடகாலத்தில் பல்வேறுபட்ட விருதுகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பெற்றுக்கொண்டுள்ளது. இவ்வருடமும் பல விருதுகளைப் பெற்றுக் கொண்டது. இலங்கை பட்டைய கணக்காளர் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 51வது வருடாந்த அறிக்கை விருதுகள் நிகழ்வில் காப்புறுதித் துறைக்கான தங்க விருதினைப் பெற்றுக்கொண்டது. நிறுவனத்திற்கு இது மூன்றாவது தடவையாகும். காப்புறுதித்துறையில் இரண்டாவது இடத்தை பெற்றுக்கொண்டதையடுத்து இத்துறையில் சிறந்த அடையாளப்படுத்தப்பட்ட நிறுவனமாக தெரியவந்தது. மேலும் SAFA Best Presented Accounts Awards இல் சிறப்புப் பரிசையும் SLITAD Awards 2015 இல் வெள்ளி பதக்கத்தையும் பெற்றுக்கொண்டது.

இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித்துறை விருதுகளில் இஸ்லாமிய நிதிக் கம்பனியை உருவாக்கியமைக்காக வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டது. நிறுவனத்தின் முறிவு அற்ற முன்னேற்றம், இலங்கையின் Lanka Monthly Digest இல் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனங்கள் வரிசையில் முதல் 100 இடங்களில் 91வது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இதற்குக் கடந்த வருடத்தில் நிறுவனம் 98வது இடத்தையே பெற்றது.

**எதிர்கால வெளித்தோற்றம்**

கடந்த சில வருடங்களாக HNB அசூரன்ஸ் பிஎல்சி ஆயுள்காப்புறுதி வியாபாரத்தில் தொடர்ச்சியான நிலையான அபிவிருத்தியைக் காட்டியுள்ளது. இதன்மூலம் குறுகிய காலப்பகுதிக்குள் சந்தையில் ஆறாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தனது நிலையை நம்பிக்கைக்குரிய காப்புறுதி சேவை வழங்குநர் என்றவாறு நிலைநிறுத்திக் கொண்டுள்ள ஆயுள் காப்புறுதி வியாபாரம் தன்னுடைய முன்னோக்கிய பயணத்தில் தனது

சந்தைப் பங்கினை மேலும் அதிகரிப்பதற்கான வளர்ச்சி வேகத்தைக் கூட்டுவதுடன் மென்மேலும் உயரத்தில் பயணிக்கவும் விரும்புகிறது. இந்த நோக்கத்திற்காக முகாமைத்துவத்துடன் மேற்கொண்ட நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர், பணிப்பாளர் சபை 2016 ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் 03 வருட காலத்திற்கான உபாயத் திட்டம் ஒன்றை அங்கீகரித்துள்ளது. இவற்றில் பிரதான உபாயத் திட்டங்கள் பின்வருவனவாகும். தாய்க்கம்பனியான HNB வங்கியுடன் இணைந்து Bancassurance வலையமைப்பினை பலப்படுத்தி சந்தை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதிய நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சேமிப்புத் திட்டங்கள் ஊடாக சுயமாக வாழக்கூடிய நபர்களை உருவாக்குவதற்காக கம்பனி தன்னுடைய சேவைக் கொடைமுனைவுகளை மீளாய்வு செய்வதுடன் காப்புறுதி ஊடாக விசாலமான நிதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தல் என்பன இவ் உபாயத்திட்டங்களில் சிலவாகும்.

HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட்டின் உபாயத்திட்டங்களில் குறிப்பிட்ட வியாபாரத்துறையில் முழுமையான இலாபத்தை முன்னேற்றுதல் மிக முக்கியமான விடயமாக அமைகிறது. வாடிக்கையாளர் தொடர்பான விடயங்கள் விலையிடல், இடர்களை இனங்காணுதல், முன்னேற்றமடைந்த சேவைகள், உயர் கணித முறைமைகளின் உள்ளீடுகளைப் பயன்படுத்தி வினைத்திறனான அடிப்படையில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்தல் என்பன ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட சில உபாயங்களாகும். இவையும் புதிய உபாயங்களுள் உள்ளடக்கப்பட்டுள்ளன.இவ்வுபாயத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும், மேற்பார்வை செய்யப்படுவதிலும் இடையறாமுயற்சி மேற்கொள்ளப்படும்.

தனித்துவமான வளர்ச்சிப் பாதையைப் பின்பற்றுகின்ற அதேவேளையில் நிறுவனம் ஏனைய வழிமுறைகள் மூலம் நாட்டில் தன்னுடைய பிரசன்னத்தை விஸ்தரிக்கும் பொருட்டு அனைத்து வாய்ப்புக்களையும் பயன்படுத்தும்.

இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை மிகவும் கவனமாக மேற்பார்வை செய்வதற்கு சபையின் துணைக் குழுக்களின் பொறுப்புகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன் அர்ப்பணிப்புடன் செயலாற்றக்கூடிய புதிய துணைக் குழுவொன்று மீள்நிருவகிக்கப்பட்டுள்ளது. இக்குழு இவ் உபாயத்திட்டத்தின் வளர்ச்சியை மேற்பார்வை செய்யும் பொறுப்பை எடுத்துக் கொண்டுள்ளது.

**ஒப்புரைகள்**

டொக்டர் (திருமதி) ராணி ஜயமஹா - மூன்று வருட காலம் நிறுவனத்தில் சேவையாற்றிய பின் 2015 ஆம் ஆண்டு பங்குனி 30 ஆம் திகதி தலைவர் பொறுப்பிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். அவர் தன்னுடைய காலத்தின் போது நிறுவனத்திற்கு வழங்கிய தலைமைத்துவத்திற்கு நிறுவனத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. மஞ்சுள டி சில்வா - 11 வருட காலம் நிறுவனத்தில் சேவையாற்றி 31 பங்குனி 2015 ஆம் ஆண்டு பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார். அவருடைய தலைமைத்துவம் மற்றும் பல வருட காலமாக HNB அசூரன்சை அபிவிருத்தி செய்து நாட்டின் காப்புறுதித் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்குவதற்குக் காரணமாக இருந்தமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

திரு. ஜொனதன் அலஸ் - இவர் 2015 ஆம் ஆண்டு சித்திரை முதலாம் திகதியிலிருந்து ஆடி மாதம் வரை பதில் தலைவராகக் கடமையாற்றியுள்ளார். மேலும், தொடர்ச்சியாக ஒரு உறுப்பினராக கடமையாற்றிய அவர் 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 03 ஆம் திகதி பணிப்பாளர் சபையிலிருந்து ராஜினாமாச் செய்தார். இவர் HNB அசூரன்சை அதி உச்சத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் ஒரு முன்னணி நிறுவனமாக வருவதற்கு ஆலோசனைகளையும்

வழங்கி வந்துள்ளார். அவருடைய பங்களிப்புகள் மற்றும் பெறுமதியான உள்ளீடுகள் என்பவற்றுக்காக நான் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. உபாலி டி சில்வா - இவர் பணிப்பாளர் சபையிலிருந்து 2016 தை மாதம் 08 ஆம் திகதி ராஜினாமாச் செய்துள்ளார். இவர் நிறுவனத்தின் ஆரம்பகாலத்திலிருந்து பல்வேறு தகைமைகளுடன் தன்னை கம்பனியுடன் இணைத்துக் கொண்டுள்ளார். இவர், சபையில் 11 வருடங்களாகப் பணியாற்றி வந்துள்ளார். அவர் நிறுவனத்திற்கு வழங்கிய ஆலோசனைகள், பங்களிப்புகள் மற்றும் பெறுமதியான ஆதரவு என்பனவற்றுக்காக நன்றி நவில்கிறேன். மேலும், HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட இயக்குனர் சபையிலிருந்து 2015 ஒக்டோபர் 10 ஆம் திகதி ராஜினாமாச் செய்த திரு. பிரதாப் குமார் டி சில்வா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நியமனங்கள்**

திரு. திமால் பெரேரா HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் இயக்குனர் சபையில் 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். HNB அசூரன்ஸ் சபைகளில் 2016 ஆம் ஆண்டு தை மாதம் 08 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது HNB இன் Retail & SME வங்கியின் பொது முகாமையாளராகக் கடமையாற்றுகின்றார். நான் அவரை HNB அசூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வங்கித் துறைகளில் அவருக்கு இருக்கக் கூடிய அனுபவம் மற்றும் அறிவு குறிப்பாக தனிப்பட்ட வங்கியியல் என்பவற்றில் உள்ள அனுபவம் HNB அசூரன்ஸ் குழுமத்தின் பலத்தை அதிகரிப்பதற்கு மிகப் பாரியளவில் பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கின்றோம்.

மேலும் 2015 ஆம் ஆண்டு மார்கழி 21 ஆம் திகதி HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் இணைந்து கொண்ட திரு. டில்ஷான் ரொட்றிகோ என்பவரையும் நான் வரவேற்கின்றேன். அவர் தற்போது HNB அசூரன்ஸ் சபையில் சேவையாற்றுகின்றார். இரண்டு சபைகளுக்கும் இவரது பிரசன்னம் மிக அதிக பங்களிப்பை வழங்குவதுடன் HNBA குழுமத்தில் இருக்கின்ற வலையமைப்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு உறுதுணை வழங்கும் என நான் நம்புகின்றேன்.

**பாராட்டுதல்கள்**

2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிய தலைவர், IBSL யின் பணிப்பாளார் நாயகம் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், இக்காப்பறுதித் துறையை வலுப்படுத்துவதற்காக காப்புறுதி குறைகேள் அதிகாரி (Ombudsman) வழங்கிய பங்களிப்பு மற்றும் அவரது அறிவு, சிறப்புத்திறன் என்பவற்றைப் பகிர்ந்து கொண்டமைக்காக அவருக்கு விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது ஏனைய பணிப்பாளர்களால் கடந்த வருடம் முழுவதும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்ப மற்றும் ஆலோசனைகளுக்காக அனைவருக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் கடந்த காலப்பகுதியில் அர்ப்ணிப்புடன் செயலாற்றிய முகாமைத்துவக் குழு மற்றும் அதன் ஊழியர்கள் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பயணத்தில் எம்மை நம்பி எம்முடன் இணைந்து செயற்பட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், பணிப்பாளர் சபை சார்பாக நான் நன்றி கூறுவதோடு தொடர்ச்சியாக நான் நிறுவனத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை 2016 ஆம் ஆண்டிலும் எடுத்து சிறந்த வர்த்தக நடைமுறைகளை உறுதிப்படுத்தி முன்னெடுத்துச் செல்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரோஸ் குரே
தலைவர்
09 மாசி 2016

**(நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2015 இல் பக்கம் 21 - 25 வரையுள்ள பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வின் தமிழ் மொழிபெயர்ப்பு)**

**பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு**

2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையைத் தங்களுக்குச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்க்கியடைகின்றேன். எமது அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட ஒன்றிணைந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பது இது நான்காவது தடவையாகும். கடந்த மூன்று வருட காலமாக நாம் தயாரித்த ஒன்றிணைந்த அறிக்கைகள், அறிக்கையிடலில் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அதிகூடிய தரத்தைக் கொண்டது என அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வருடாந்த அறிக்கை விருதுகளில் தொடர்ச்சியாக மூன்று வருடங்களாக தங்க விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளோம். நாம் இவ்வருடத்தில் கடந்து வந்த பயணம் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

**காப்புறுதிச் சந்தை**

இவ் வருட ஆரம்பத்திலேயே அனைத்துக் காப்புறுதி நிறுவனங்களும் தமது காப்புறுதி வர்த்தகத்தை பொதுக்காப்புறுதி மற்றும் ஆயுள் காப்புறுதி என வெவ்வேறாகப் பிரித்துக் கொள்ளுமாறு வேண்டப்பட்டன. இது இலங்கை காப்புறுதிச் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டலைப் பின்பற்றி ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டப்பட்ட ஏற்பாடுகளாகும். வெவ்வேறாக்கப்பட்ட அந்த நடவடிக்கையைத் தொடர்ந்து தற்போது 15 நிறுவனங்கள் ஆயுள் காப்புறுதித் தொழிலும் 16 நிறுவனங்கள் பொதுக்காப்புறுதித் துறையிலும் தொழிற்படுகின்றன.

காப்புறுதிச் சந்தை விரிவடைவதற்கு சாதகமான சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும் ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக்காப்புறுதியில் ஈடுபடுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் இருப்பதனால் 2015 ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்துறை இரண்டும் இணைந்த 1% வளர்ச்சியைக் காட்டியது. இரண்டு காப்புறுதித் துறைகளும் இணைந்து பெற்றுக்கொண்ட வளர்ச்சி வீதம் 17% ஆகும். இதில் ஆயுள் காப்புறுதித்துறை 20% வளர்ச்சியையும் பொதுக் காப்புறுதித்துறை 15% வளர்ச்சியையும் பதிவு செய்தது. பொதுக்காப்புறுதித் துறையில் விலை தொடர்பாக எழுந்துள்ள போட்டி மற்றும் பொதுமக்கள் தமது எதிர்கால நிதிப் பாதுகாப்பைக் கட்டியெழுப்புவதற்கு ஆயுள் காப்புறுதித் துறையைத் தேர்ந்தெடுப்பதில் பின்வாங்குதல் என்பன இவ் மிதமான வளர்சிக்கு காரணமாகும். எனினும் இக்காப்புறுதித்துறையின் பெறுமதி விஸ்தரிப்பு செய்வதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் கூட அது சாதாரணமான வளர்ச்சியைக் காட்டியுள்ளது.

**குழுவின் முழுமையான செயற்தின்**

நாம் இந்த வருடத்தை HNB அசூரன்ஸ் பீஎல்சீ (HNBA) ஆயுள் காப்புறுதி விடயங்களைக் கையாளவும் HNBA யிற்கு 100% சொந்த மான HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் (HNBGI) துணை நிலை நிறுவனம் பொதுக்காப்புறுதி விடயங்களைக் கையாளுகின்ற அடிப்படையில் நமது வர்த்தக நடவடிக்கைகளை வெற்றிகரமாக வெவ்வேறாக்கி ஆரம்பித்தோம். இதன் கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையாக 2014 ஆம் ஆண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களுக்கு தனித்தனியாக அவர்களின் பங்கினை ஒதுக்கிக் கொடுத்தமை இவ்வர்த்தகத்தை வெவ்வேறாகப் பிரித்து சுமூகமாக அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதற்குத் ஏதுவான சூழ்நிலை ஒன்றினை

தோற்றுவித்துள்ளது. இவ்வகையில் இக்குழுமம் ரூபா 5.4 பில்லியனை கட்டுப்பண வருமானமாகப் பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 17% ஆல் வளர்ச்சியடைந்துள்ளது.
மேலும் இவ்வருடத்திற்கான வரிக்கு பின்னரான வருமானமாக ரூபா 197 மில்லியனை இக் குழுமம் பதிவு செய்துள்ளதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருமானமானது வீழ்ச்சியடைந்துள்ளது. ஆயுள் காப்புறுதி வியாபாரம் சிறந்த இலாபமாக ரூபா 428 மில்லியனை ஈட்டித் தந்துள்ளது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது இவ்வருமானமானது 88% ஆல் அதிகரித்துள்ளது. எனினும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் துணை நிறுவனத்தில் ஏற்பட்ட நட்டம் காரணமாக HNB அசூரன்ஸ் பிஎல்சி குழுமத்தின் முழுமையான செயற்திறனில் வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் HNB அசூரன்ஸ் பிஎல்சி மற்றும் வரையறுக்கப்பட்ட ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் ஆகிய இரு நிறுவனங்களும் தற்போதுள்ள கடன்தீர்க்கும் தேவைப்பாடுகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் பலமான முதலீட்டைக் கொண்ட நிறுவனமாக விளங்குகிறன. எதிர்காலத்துக்கு முதலீட்டு விகிதத்தை உறுதிப்படுத்துவதற்கு 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இடரை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டுக் கட்டமைப்பு (RBC) அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும் இவ்விரண்டு நிறுவனங்களின் பலம் (Fitch Rating) லிமிட்டடினால் மீளுறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது இரண்டு நிறுவனங்களும் இன்னொரு வருடத்திற்கு தேவையான நிலையான தோற்றப்பாட்டுடன் கூடிய காப்புறுதியாளர் நிதி தரப்படுத்தல் மற்றும் தேசிய நீண்டகால தரப்படுத்தல் என்பனவற்றின் மூலம் “A(LKA)” என தரப்படுத்தபடுத்தப்பட்டுள்ளது.

**ஆயுள் காப்புறுதி வர்த்தகம்**

ஆயுள் காப்புறுதி வர்த்தகத்தின் செயற்திறன் பாராட்டத்தக்கதாகும். சவால்களுக்கு உட்பட்ட வர்த்தகக் காலப்பகுதியில் 19% வளர்ச்சியுடன் ரூபா 2.8 பில்லியன் கட்டுப்பண வருவாயை பெற்று கொண்டது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். அறக்கட்டளைக் கொள்கைகள் இதற்குப் பிரதான பங்களிப்பை வழங்கியுள்ளன. இவ்வளர்ச்சி 25% ஆல் அதிகரித்துள்ளது.

“மை பண்ட்” அன்ட் “ரண் மக” ("My Fund" and "Ranmaga") ஆகிய இரண்டும் எமது பிரதான அறக்கட்டளைக் கொள்கைகளாகும். இவையிரண்டும் இவ்வருடத்தில் விற்பனையில் தொடர்ச்சியான மேம்பாடுகளைக் காட்டியுள்ளன. இவற்றின் பங்களிப்பு நிறுவனத்தின் வளர்ச்சிக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. கிரம கட்டுப்பண அறக்கட்டளைக் கொள்கைகள் நீண்டகாலமாக நிறுவனத்திற்குப் பாரியளவு பெறுமதியை வழங்கியுள்ளமையினால் இதில் ஏற்பட்ட வளர்ச்சியும் ஆயுள் காப்புறுதித் துறை வியாபாரத்தின் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு அளித்துள்ளது. முதலீட்டை அடிப்படையாக் கொண்ட கொள்கைகள் குறைந்து வந்துள்ளதோடு எமது உபாயத் திட்டங்கள் அறக்கட்டளை வர்த்தகத்தில் இலாபத்தை ஈட்டுவதற்குக் காரணமாக இருந்துள்ளது. குறைந்தளவு வட்டி வீதத்தை அறிமுகப்படுத்தியமையினால் வீடமைப்புக் கடன் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதுடன் எமது ஈட்டுக்களைக் குறைக்கும் கொள்கைகளை சந்தைப்படுத்துவதற்கு அதிகளவு வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இதில் 52% வளர்ச்சியையும் இவ்வகை வர்த்தகம் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. காப்புறுதி ஆரம்பித்த முதலாவது வருட காலத்தில் போது கொள்கை காலாவதியாகுதல் ஆயுள் காப்புறுதிக் கைத்தொழில் துறையின் கவனத்தில் மேற்கொள்ள வேண்டிய விடயமாகும். இத்துறையில் எமது செயற்திறனை மேம்படுத்துவதற்கு நாம் கொடுப்பனவு செயற்பாடுகளைக் கண்டறிவதற்கான ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்தி இருந்தோம். மேலும் தொடர்ச்சியான மேற்பார்வை நடவடிக்கைகள் மூலம் முதல் வருடத்தில் காலாவதியாகும் தொகையை 3% ஆல் குறைக்ககூடியதாக இருந்தது. இது எம்முடைய நீடிப்பு வீதத்தை மேம்படுத்துவதற்கு உதவியதோடு மட்டுமல்லாமல் உயரிய புதுப்பித்தல்

கட்டுப்பணத்தையும் அதிகரித்துள்ளது. இவை அனைத்தும் நிறுவனத்தின் முழுமையான வருமானங்களை உயர்த்தியுள்ளது.

மேற்குறிப்பிட்ட வெற்றிகளுக்குச் சமாந்தரமாக நிறுவனமானது 14 மில்லியன் டொலர் றவுன் டேபிள் (MDRT) வெற்றியாளர்களை உருவாக்கியுள்ளது. இது ஏற்கனவே இருந்த நான்கு வெற்றியாளர்களோடு ஒப்பிடுகையில் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இத்தகைய சர்வதேச அங்கீகாரம் பெற்றமை ஆயுள் காப்புறுதித்துறை வளர்ச்சியில் ஏற்பட்ட மிக முக்கியமான அந்தஸ்தாகும். ஏற்கனவே இருந்த நான்கு வெற்றியாளர்களுடன் 10 புதிய வெற்றியாளர்களை இவ்வருடத்தில் தோற்றுவிப்பதற்கான தகைமை நிறுவனத்திடம் இருந்துள்ளது. இது முகாமைத்துவக் குழுவின் அர்ப்பணிப்புடன்கூடிய முயற்சியின் பிரதிபலிப்பாகும். விற்பனையாயாளர்களை சர்வதேச ரீதியான தரப்படுத்தப்பட்ட மட்டத்தில் செயற்படக்கூடிய வகையில் உருவாக்கியமையும் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் உயரத்தை எட்டுவதற்கும் உதவி செய்துள்ளது.

வருட இறுதி வியாபாரத்திற்கான மதிப்பிடலானது ஆயுள் காப்புறுதி நிதி ரூபா 476 மில்லியன் உண்மையில் ஒதுக்கப்பட வேண்டிய தேவைப்பாட்டிற்கு மேலதிகமாக மதிப்பிடப்பட்டது. இந்த மொத்த இலாபத்தில் இருந்து நாம் ரூபா 86 மில்லியனை காப்புறுதிக் கொள்கையாளர்களுக்கு ஊக்குவிப்பாகப் பங்கீடு செய்யவும் மற்றும் ரூபா 310 மில்லியனை ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் இருந்து தோன்றிய மொத்த இலாபம் என்ற அடிப்படையில் பங்குதாரர்களின் நிதியத்திற்கும் மாற்றப்பட்டது. நாம் ரூபா 1000 ற்கு ரூபா 54 என்ற அடிப்படையிலான அதிகூடிய ஊக்குவிப்பு வீதத்துடன் பங்கிலாப அடிப்படையான கொள்கைகளுக்கு 7.5% பங்கிலாபத்தையும் செலுத்தியிருந்தோம். தற்போதைய சந்தை சூழ்நிலைகளில் இவ்வாறு நாம் எடுத்த நடவடிக்கைகள் மிகவும் கவர்ச்சியானதாகும். ஆயுள் காப்புறுதி வியாபாரத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி, ஆயுள் காப்புறுதி நிதியத்தை 27% ஆல் அதிகரித்ததுடன் அதன் தொகை ரூபா 6.9 பில்லியனாகும். பங்குதாரர்களுக்கு மாற்றப்பட்ட மொத்த இலாபம் 26% ஆக அதிகரித்தது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 10% இனால் அதிகரித்துளள்ளது.

## முதலீடு

அரசியல் மற்றும் ஆக்கப் பொருளாதாரம் என்பவற்றில் இருந்த நிச்சயமற்ற தன்மைகள், வட்டி வீதங்கள், வெளிநாட்டு நாணயமாற்றம் மற்றும் முதலீட்டுச் சந்தைகள் என்பவற்றில் தளம்பல் நிலையைக் காட்டியது. இத்தகைய கடினமான சந்தைச் சூழ்நிலைகளில் நிறுவனம் முதலீட்டு வருமானத்தில் ரூபா 918 மில்லியனை இவ்வருடத்தில் பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. இவற்றில் ரூபா 729 மில்லியன் HNB அசூரன்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் ஊடாகவும் ரூபா 189 மில்லியன் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் துணை நிறுவனம் ஊடாகவும் பெறக்கூடியதாக இருந்தது. மேலும் நிறுவனம் சராசரி முதலீட்டுப் பெறுபேறுகளையும், வருடாந்த சராசரி இடர் அற்ற விகிதமாக 6.6% ஐ விட மேல் மட்டத்தில் தக்க வைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் இரண்டிலும் சராசரி முதலீட்டுப் பெறுபேறு 10.1% ஆகும். மேலும் அரசாங்க முறிகளில் இருந்து ரூபா 15.7 மில்லியனை இலாபமாக பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. இதனைவிட, தொகுதிக்கடன்களில் இருந்து வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதியில் வட்டி வீதங்களை மிகத் திறமையாகப் பயன்படுத்தியும், பிற்பட்ட 6 மாத காலப்பகுதியில் வட்டி வீதங்களில் ஏற்பட்ட பாரிய உயர்வு என்பவற்றின் மூலம் தொகுதிக்கடன்களில் இருந்து ரூபா 12.6 மில்லியனை இலாபமாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. மேலும் ரூபாவின் பெறுமதியில் பாரியளவு வீழ்ச்சி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டு அவற்றை சமாளிக்கக்கூடிய வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினால், நிறுவனம் வெளிநாட்டு நாணயத்தில் இருந்து ரூபா 12 மில்லியனை இலாபமாகப் பெறக்கூடியதாக இருந்தது.

கடினமான செயற்பாட்டுச் சூழ்நிலையிலும் கூட நிறுவனம் உள்ளக நிதி முகாமைத்துவக் குழுவின் செயற்பாட்டுத் திறன் மூலமாக மொத்த இலாபத்துக்கு முதலீட்டு வருமானத்தின் முலம் வழங்கப்பட்ட பங்களிப்பானது பாராட்டப்பட வேண்டியதாகும்.

**பொதுக் காப்புறுதி வர்த்தக துணை நிறுவனம் தொடர்பான அறிக்கை**

கடுமையான போட்டி விலைச் சூழ்நிலைகளிலும் கூட எமது பொதுக்காப்புறுதி நிறுவனம் ரூபா 2.7 பில்லியன் ரூபாவை கட்டுப்பண வருமானமாகப் பதிவு செய்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 16% வளர்ச்சியாகும் என்பதுடன் இதன் பிரதானமான பகுதியாக 2 பில்லியன் ரூபா கட்டுப்பண வருமானத்துடன் 76% பங்களிப்பினை மோட்டார் வாகனத்துறை வழங்கியுள்ளது. மற்றும் ரூபா 372 மில்லியன் கட்டுபண வருவாயை கொண்ட தீ மற்றும் பொறியியல் அபாய பிரிவின் 14% பங்களிப்பை செய்துள்ளது.

கடற் காப்புறுதி துறையில் இருந்து 6% வருமான வளர்ச்சி ஏற்பட்டதோடு மருத்துவக் காப்புறுதி கட்டுப்பணம் தெரிவு செய்யப்பட்ட ஏற்றுக்கொள்ளல் கொள்கையின் விளைவாக 15% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. எமது தகாபுல் காப்புறுதி (Takaful காப்புறுதி) ரூபா 132 மில்லியனை கட்டுப்பண வருமானமாகப் பதிவு செய்து 57% சிறப்பான வளர்ச்சியைக் காட்டியுள்ளது. இந்தத் துறை மேலும் வலுப்படுத்தப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டு வர்த்தகச் செயற்பாடுகளை விரிவாக்கல் செய்து, விசேடமாக கிழக்குப் பகுதியில் மேலதிக வளர்ச்சியைப் பதிவு செய்வதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வருட காலப்பகுதியில் பிரதானமாக வாகனக் காப்புறுதி இழப்பீட்டு கோரிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, பொதுக் காப்புறுதி வர்த்தகத்தில் நிகர இழப்பீட்டு கோரிக்கைகள் 88% விகிதத்திற்கு அதிகரித்தது. கடந்த வருட காலப்பகுதியில் மோட்டார் கார் பிரிவில் எம்முடைய தனிப்பட்ட பயன்பாடு மோட்டார் பிரிவில் அதிகரித்த இழப்புக்கள் தனிப்பட்ட பயன்பாடு மோட்டார் கார் அல்லாத பிரிவில் ஏற்பட்ட சிறப்பான செயற்பாட்டின் மூலமாக ஈடு செய்யப்பட்டது. ரூபாவின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வாகன உதிரிபாகங்களின் விலை அதிகரிப்பினால் வாகனங்களைத் திருத்துவதற்கான செலவினம் அதிகரித்தமை, விபத்துக்களின் தொகையில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சி, சந்தை நிலையுடன் சேர்ந்து செல்லக்கூடிய வகையிலான போட்டியான விலையிடல் என்பன கடந்த காலத்தின் போது கோரிக்கை விகிதத்தை அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகும்.

இழப்பீட்டு கோரிக்கை விகிதத்தில் அதிகரிப்பு ஏற்பட போதிலும், எமக்கு செலவுகளை கட்டுப்படுத்தக் கூடியதாகவும், செலவு வீதத்தை 35% ஆக வைத்துக்கொள்ளக்கூடியதாகவும் இருந்தது. இது கடந்த வருடத்தில் இருந்த 38% ஐ விட குறைவாகும். எவ்வாறாயினும், அதிகரிக்கப்பட்ட இழப்பீட்டு கோரிக்கை வீதம் காரணமாக 2014 ஆம் ஆண்டு 110% ஆக இருந்த இணைந்த வீதம் இவ்வருடம் 123% ஆகப் பதிவு செய்யப்பட்டது.

மீளாய்வுக்குட்பட்ட இவ்வருடத்தில் பொதுக்காப்புறுதி துறையிலிருந்து பெறப்பட்ட முதலீட்டு வருமானம், சந்தைச செயற்பாட்டைவிடச் சிறந்ததாகும். எனினும், இந்த ஈர்க்கக்கூடிய முதலீட்டு வருமானம் ஆனது காப்பீட்டு துறையில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய போதுமான தாக இல்லை இதன் காரணமாக 2015 ஆம் ஆண்டு HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் ரூபா 227 மில்லியன் நட்டமாக பதிவு செய்யப்பட்டது.

பொதுக் காப்புறுதித்துறையை மேம்படுத்துவதற்கு நிறுவனம் ஒரு திட்டத்தை அபிவிருத்தி செய்து அமுல்படுத்தியது. இவை, வாகனக் காப்புறுதித் துறையில் காப்புறுதி பெறுமதியானது உயரிய கணிப்பீட்டு முறையில் தீர்மானிக்கப்படுகிறது. இது வாகனத்தின் வகை/ பெறுமதி /வியாபார பிரிவு என்பவற்றின் அடிப்படையாக கொண்டு மேலும் மோட்டார் கார் அல்லாத துறைகளைப் பாதுகாப்பதற்கு கூடியளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை. அத்துடன் நட்டத்தை ஏற்படுத்தும் கணக்குளை புதுப்பிக்காமை மற்றும் பிரதானமாக இலாபமீட்டலை

நோக்காக கொண்டு மொத்த செயற்பாட்டுத் திறனின் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குரிய வகையில் அனைத்து நீண்டகால வியாபார கைகோர்புகள் தொடர்பாகவும் மீள் பேச்சுவார்த்தை நடத்துதல் என்பனவும் சில திட்டங்களாகும்.

இதனை விட இழப்பீட்டு கோரிக்கை முகாமைத்துவம் இழப்பீடு மதிப்பீடு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இழப்பீட்டு நடைமுறைகள் கப்புறுதியாளரின் தேவைகளுக்கு போதுமான அவதானத்தை செலுத்தும் அதேவேளை உயிர்ப்பான அணுகுமுறை ஒன்றினை கைகொள்ளல் மூலம் காப்புறுதி இழப்பீட்டு செலவினை குறைக்கும் வகையில் இயைபாக்கம் செய்யப்பட்டுள்ளது.
பொது காப்புறுதி நிருவனத்தின் முதலீட்டுத் தளத்தை மேலும் வலுப்படுத்தக்கூடிய வகையில் HNB அசூரன் பிஎல்சி அதாவது தாய் நிறுவனம் 2015 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ரூபா 150 மில்லியனை புதிதான முதலீடாக உள்ளீடு செய்துள்ளது. இது HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் கடன்தீர் ஆற்றல் மட்டத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

**ஆளுமை**

நிறுவனம் தனது வர்த்தகத்தில் ஒழுக்க விழுமியங்களையும் நடைமுறைகளையும் தொடர்ச்சியாகப் பின்பற்றுவதன் மூலம் கூட்டுறவு ஆட்சியில் உயரிய மட்டத்தைப் பேணி வருவதுடன் அனைத்து ஒழுங்குபடுத்தல்கள் தேவைப்பாடுகளுடன் உரிய நேரத்தில் இணங்கி செயற்பட்டு வருகிறது. தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையானது நிறுவனம் வருடம் பூராகவும் இத்தகைய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி நடப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

HNB அசூரன்ஸ் பிஎல்சி மற்றும் வரையறுக்கப்பட்ட HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனம் ஆகிய இரண்டிலும் தலைவராக கடமையாற்றிய கலாநிதி ராணி ஜயமகா, 2015 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆம் திகதி தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவருடைய பதவிக் காலத்தின் போது, நிறுவனத்திற்கு அவர் வழங்கிய ஆலோசகைள் மற்றும் வழிகாட்டல்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 06 ஆம் திகதி HNB அசூரன்சின் பணிப்பாளர் சபையின் தலைவராக இணைந்து கொண்ட திருமதி ரோஸ் குரே அவர்கள் அதனைத் தொடர்ந்து HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். நான் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்பதுடன், பல்வேறு துறைகளிலான அவருடைய அனுபவம், திறமை, அறிவு என்பனவற்றில் இருந்து நிறுவனம் அதி உச்ச பயனடையும் அதேவேளை அவர் இக் குழுமத்தை கூர்மதியுடன் புதிய உச்சங்களை நோக்கி வழி நடத்துவார் என நம்புகிறேன்.

திரு. மஞ்சுள டி சில்வா, HNB அசூரன்ஸ் பீஎல்சி மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனம் ஆகியவற்றின் முகாமைத்துவப் பணிப்பாளரான இவர் 2015 பங்குனி 31 ஆம் திகதி தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்தார். அவர் கடந்த 11 வருடங்களாக நிறுவனத்தில் அர்ப்பணிப்புடன் செயலாற்றி அதனை வலுப்பெறச் செய்தமைக்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ஜொனதன் அலஸ், 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரை தற்காலிக தலைவராகக் கடமையாற்றியதுடன் இவர் HNB அசூரன்ஸ் பீஎல்சி மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனம் ஆகிய இரண்டினதும் பணிப்பாளர் சபையில் இருந்து 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 03 ஆம் திகதி இராஜினாமா செய்துள்ளார். அவருடைய மதிப்பிட முடியாத வழிகாட்டல்கள், ஆலோசனைகளுக்கு நான் நன்றி கூற விரும்புகின்றேன். அத்துடன் நிறுவனம் பல புதிய எல்லைகளை அடைதல் மற்றும் குழுமத்தின் ஆற்றலை கட்டி எழுப்ப அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்பன மிகவும் பாராட்டபட வேண்டியவை ஆகும்.

திரு. எம்.யூ.டி.சில்வா, இவர் 2016 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதி HNB அசூரன்ஸ் பிஎல்சி யின் இயக்குநர் சபையிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். கடந்த வருடங்களில் நிறுவனத்தின் வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு அவரால் வழங்கப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைகளுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. திமால் பெரேரா - இவர் HNB அசூரன்ஸ் பிஎல்சி யின் பணிப்பாளர் சபையில் 2016 தை மாதம் 08 ஆம் திகதியும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் இயக்குநர் சபையில் 2015 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆம் திகதியும் பணிப்பாளராக இணைந்து கொண்டார். அவரை நான் அன்புடன் வரவேற்பதோடு அவரது பங்களிப்பு HNB குழுமத்தின் ஆற்றலை அதிகரிக்கும் என நம்புகிறேன்.

2015 ஆம் ஆண்டு மார்கழி 21 ஆம் திகதி HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவன பணிப்பாளர் சபைக்கு திரு. டில்சான் ரொட்றிகோ நியமிக்கப்பட்டதன் மூலம் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் இயக்குநர் சபை மேலும் வலுப்பெற்றுள்ளது. இவர் HNB அசூரன்ஸ் பிஎல்சி இயக்குநர் சபையிலும் கடமையாற்றிவருகிறார். இவருடைய பிரசன்னம் HNBA குழுமத்திற்கு இடையிலான தொடர்பாடலை மேலும் வலுப்படுத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

திரு. பிரதாப் குமார் டி சில்வா 2015 ஆம் ஆண்டு ஐப்பசி 10 ஆம் திகதி HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தில் பணிப்பாளர் சபையில் இருந்து ராஜினாமா செய்துள்ளார். இவருடைய சேவைக் காலத்தின் போது நிறுவனத்திற்கு செய்துள்ள அளவற்ற பங்களிப்புக்கு நன்றி கூறும் அதேவேளை அவர் இனிவரும் காலங்களில் சிறந்த தேகாரோக்கியத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும் என நான் வாழ்த்துகின்றேன்.

**பாராட்டுதல்கள்**

எனக்கும் எனது குழுவனருக்கும் வழங்கிய ஒத்துழைப்பு, ஊக்குவிப்பு ஆகியவற்றுக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினரை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். மேலும் நான் IBSL யின் தலைவர் IBSL யின் செயலாளர் நாயகம், ஊழியர்கள் அனைவரும் வழங்கிய பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கின்றேன். இவ் ஆண்டு காலப்பகுதியில் நிறுவனத்தை நடத்தி செல்வதற்கு, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், பிரிவு தலைவர்கள், முகாமையாளர்கள், ஊழியர்கள், விற்பனை மற்றும் வெளிக்கள உறுப்பினர்கள் ஆகியோர் வழங்கிய அளவற்ற பங்களிப்புக்கும் நான் எனது விசேடமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் HNB யின் தலைமை அலுவலகம், கிளைகள் ஆகியவற்றில் கடமையாற்றுகின்ற அனைவரும் எமது குழுவுக்கு தொடர்ந்தும் வழங்கிய ஆதரவுக்கு அவர்களை மனதாரப் பாராட்டுகின்றேன். நான் என்னுடைய குழுவுடன் இணைந்து தரகர்கள், மீள் காப்புறுதியாளர்கள், இடையீட்டுத் தரகர்கள், வலைப்பின்னல் மற்றும் உபாயத்திட்ட பங்காளர்கள் ஆகியோர் எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய சேவையைப் பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எதிர்கால வளர்ச்சியும் தோற்றமும்**

எதிர்காலத்திலும் காப்புறுதித்துறை நாட்டில் போட்டி மிக்க ஒரு வர்த்தகமாக இருப்பதுடன் புத்தாக்கங்களுடனான நிறுவனங்களுக்கு வளர்ச்சியடையக்கூடிய சந்தர்ப்பங்களையும் கொண்டுள்ளது. இது இலங்கை காப்புறுதிச் சந்தையின் மனோபவத்தினை விபரித்து வழங்கப்பட்ட பிற்ச் ரேட்டிங்கினால் (Fitch Rating) வெளியிடப்பட்ட அண்மைக்கால அறிக்கையின் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வருட காலப்பகுதியில் புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல், தற்போதைய பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு மேலதிக பெறுமதி சேர்ப்பதன் மூலம் வியாபாரத்துறையை மேலும் விருத்தி செய்வது பிரதான நோக்கமாகும். மிக முக்கியமான உபாயமாக, நாம் எமது கிளை வலையமைப்பை விரிவாக்குவதன் மூலம் நாடு பூராகவும் வியாபாரத்தை படிப்படியாக விஸ்தரிக்க தீர்மானித்துள்ளோம் அல்லது சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் குழுமத்தைப் பயன்படுத்தி அங்கு இருக்கக்கூடிய வாய்ப்புக்களை அதிகரிக்க எண்ணியிருக்கின்றோம். வாடிக்கையாளர்களுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்துவது எமது வர்த்தகத்திற்கு முக்கியமான பங்களிப்புச் செய்யும் என்பதுடன் எமது விற்பனை ஆளணியினரின் தொழில் தகைமையினை மேம்படுத்துவதற்கு உரிய அவதானம் எடுக்கப்படும்.

ஹட்டன் நஷனல் வங்கியால் எமது Bancassurance வலையமைப்பு செயட்ப்பாட்டிற்கு வழங்குகின்ற ஆதரவு மூலம் எமது வர்த்தகம் பாரியளவில் வலுப்பெற்றுள்ளது. இந்த உறவு பல்வேறுபட்ட வாடிக்கையாளகளுக்கு எமது பல்வேறுபட்ட பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதில் உள்ள பாரிய வாய்ப்புகளை இனம் கண்டு பயன்பெற உந்து சக்தியாக இருக்கும் வகையில் தொடர்ச்சியாக பேணப்படும்.

இடரை அடிப்படையாகக் கொண்ட முதலீடு (RBC) சூழலின் கீழ் ஏற்கனவே இருந்த கடன் தீர் ஆற்றல் விகிதத்தனை விட முதலீட்டு முகாமைத்துவத்திற்கும் கூடுதல் அவதானம் வழங்கப்படும். எமது உள்ளக காப்புறுதி உயிர்கணிப்பாட்டளர் குழு தொடர்ந்தும் வெளியக கணிப்பாட்டளர் வல்லுனர்களுடன் இணைந்து சிறப்பாக வடிவமைக்கப்பட்டகொள்கைகள் ஊடாக இலாபத்தினை அதிகரிக்கும் அதேவேளை எமது முலதன தகுதி வீதம் தொடர்ந்தும் உறுதியாக இருப்பதை உறுதி செய்யும் வகையில் கட்டமைப்புக்களையும், கொள்கைகளையும் அபிவருத்தி செய்வார்கள்.

நம்பகதன்மையான மற்றும் பொருப்பான காப்புறுதியாளராக தோற்றம் பெற்றுள்ள நாம் HNB அசூரன்ஸ் மற்றும் HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களின் வியாபாரகுறி தோற்றத்தினை வலுப்படுத்துவதற்கு நாம் தொடர்ந்தும் செயற்படும் அதேவேளை ஏற்கனவே உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நடைமுறைகளை எமது செயற்பாடுகளில் உள்வாங்கும் நடவடிக்கைகளை ஏற்கனவே தொடங்கியுளளோம்.

இயல்பான வழிவகைகள் ஊடாக ஆக்கிரமிப்புடன் வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன் நிறுவனம் எமது பங்குதாரருக்கு பெறுமதி சேர்க்க கூடிய வேறுவகையான வழிவகைகள் ஊடாக வியாபரத்தினை விரிவாக்கம் செய்யகூடிய வாய்ப்புக்களை தொடர்ந்தும் தேடிச்செல்லும். இதேபோன்று, உலக தரம் வாய்ந்த நிறுவனங்களுடன் தொழில்நுட்ப பங்காளர்களாக அல்லது ஒப்புரவு பங்காளர்களாக கைகோர்த்து கொள்ளக்கூடிய வகையில் உபாயத் திட்டங்களை வகுத்து அந்நிறுவனங்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதற்கும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தை உயர்த்தி எமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்கு உலக தரம் வாய்ந்த சேவைகளை வழங்குவதற்கும் நாம் தொடர்ச்சியாக கவனத்தில் கொண்டு வருகின்றோம்.

HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் துணை நிறுவனத்தில் ஏற்படக்கூடிய நட்டங்களைக் குறைப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட வழிவகைகள் மீது முகாமைத்துவக் குழுவின் நெருங்கிய அவதானிப்பு செலுத்தப்படும். தற்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ள திட்டமான வியாபார கலவையின் மாற்றம் மற்றும் வியாபார ஊடகங்களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்துவது எமது பிரதான நோக்கமாகும். ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருக்கும் இத் திட்டங்களின் பெறுபேறுகளை 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது காணக்கூடும் என நம்புகிறோம்.

கட்டுப்பண வருமானம் மற்றும் இலாபம் என்பவற்றில் நிலையான வளர்ச்சியை தொடர்ச்சியாகவும் நாட்டின் காப்புறுதித் துறையில் மிகக்குறுகிய காலத்தில் 06 ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டதில் முன்னணி வகிக்கின்ற HNB அசூரன்ஸ் 2015 ஆம் ஆண்டு மார்கழி 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிலும் சிறப்பான பெறுபேறுகளை வழங்கியுள்ளது ஒரு முக்கியமான விடயமாகும்.

ஆயுள் காப்புறுதி பல வருடங்களாக உருவாக்கிய உறுதியான தளத்தில் ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்தப்படும் திட்டங்கள், 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாதுகாப்பினை நோக்காக கொண்ட கொள்கைகளின் விற்பனையை மேலும் வலுப்படுத்தும்.

HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் நட்டமானது குழுமத்தின் இலாபத் தன்மையைப் பாதித்த போதிலும் பொதுக்காப்புறுதி வியாாபார மார்க்கத்தினை மாற்றியமைக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் முலம் துணை நிறுவனம் எதிர்காலத்தில் குழுமத்தின் நிலைப்பேறான பெறுமதிக்கு திடமான பங்களிப்பினை செல்லுத்தும் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

நிரஞ்சன் மாணிக்கம்
தற்காலிக பிரதம நிறைவேற்று அதிகாரி
09 மாசி 2016

# HNB ASSURANCE PLC

## நிதி நிலைமைக் கூற்று

| *31ஆம் திகதி மார்கழி 2015 உள்ளபடியான* | குழுமம் | | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | **2015** | 2014 | | **2015** | 2014 |
| | **ரூ.'000** | ரூ.'000 | | **ரூ.'000** | ரூ.'000 |
| **சொத்துக்கள்** | | | | | |
| அருவச் சொத்துக்கள் | 45,185 | 51,622 | | 45,185 | 51,622 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 136,279 | 133,942 | | 94,107 | 133,942 |
| பிற்போட்ட வரி சொத்து | 49,394 | - | | - | - |
| நிதி முதலீடுகள் | 9,751,611 | 8,277,895 | | 7,849,625 | 8,171,269 |
| உப நிறுவனத்தின் மீதான முதலீடுகள் | - | - | | 1,150,000 | 100,000 |
| ஆயுட்காப்புறுதிதாரருக்கான கடன்கள் | 91,992 | 71,082 | | 91,992 | 71,082 |
| மீள் காப்புறுதி நிலுவைகள் | 141,354 | 162,260 | | 34,269 | 162,260 |
| கட்டுப்பண நிலுவைகள் | 345,916 | 364,051 | | 5,592 | 364,051 |
| ஏனைய சொத்துக்கள் | 625,985 | 683,149 | | 493,571 | 682,639 |
| காப்புறுதி கோட்பாட்டு - பிற்போடப்பட்ட செலவுகள் | 65,935 | 52,072 | | - | 52,072 |
| காசும் காசுக்கு சமனானவையும் | 386,929 | 173,245 | | 258,222 | 171,217 |
| மொத்த சொத்துக்கள் | 11,640,580 | 9,969,318 | - | 10,022,563 | 9,960,154 |
| | | | | | |
| **பங்குதாரர் உரிமைகளும் பொறுப்புக்களும்** | | | | | |
| **நிறுவன பங்குதாரகளுக்கு உரித்தாகக்கூடிய மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 1,171,875 | 1,171,875 | | 1,171,875 | 1,171,875 |
| வருமான ஒதுக்கீடுகள் | 1,174,262 | 1,196,546 | | 1,397,806 | 1,189,039 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | (4,748) | 3,590 | | 53 | 3,523 |
| ஏனைய ஒதுக்கீடுகள் | (1,093) | 1,177 | | (2,039) | 1,177 |
| ஆயுட்காப்புறுதிதாரருக்கான ஒதுக்கப்பட்ட நிதியம் | (56,350) | 40,748 | | (56,350) | 40,748 |
| **நிறுவன பங்குதாரகளுக்கு உரித்தாகக்கூடிய மூலதனமும் ஒதுக்கங்களும்** | 2,283,946 | 2,413,936 | | 2,511,345 | 2,406,362 |
| சிறுபான்மை நலன்கள் | - | - | | - | - |
| **மொத்த பங்குதாரர் உரிமைகள்** | 2,283,946 | 2,413,936 | | 2,511,345 | 2,406,362 |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| ஆயுள் காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் | 7,007,080 | 5,562,648 | | 7,007,080 | 5,562,648 |
| பொது காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் | 1,546,265 | 1,279,138 | | - | 1,279,138 |
| ஊழியர் பணிக்கொடுப்பனவு பொறுப்புக்கள் | 81,001 | 71,493 | | 44,008 | 71,493 |
| நடைமுறையிலுள்ள வரிப் பொறுப்புக்கள் | - | 12,012 | | - | 10,422 |
| பிற்போட்ட வரி பொறுப்புக்கள் | - | 8,845 | | - | 8,845 |
| மீள் காப்புறுதிகடன் கொடுநர் | 131,905 | 110,778 | | 37,547 | 110,778 |
| ஏனைய பொறுப்புக்கள் | 590,383 | 510,468 | | 422,583 | 510,468 |
| **மொத்த பொறுப்புக்கள்** | 9,356,634 | 7,555,382 | | 7,511,218 | 7,553,792 |
| **மொத்த பங்குதாரர் உரிமைகளும் பொறுப்புக்களும்** | 11,640,580 | 9,969,318 | | 10,022,563 | 9,960,154 |

## HNB ASSURANCE PLC

### முழுமையான வருமானக் கூற்று

| *31ஆம் திகதி மார்கழி 2015 முடிவடைந்த ஆண்டிற்கான* | குழுமம் | | கம்பனி | | மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | **2015** | 2014 | **2015** | 2014 | குழுமம் | கம்பனி |
| | **ரூ.'000** | ரூ.'000 | **ரூ.'000** | ரூ.'000 | % | % |
| மொத்த விண்ணப்பக் கணிப்பு கட்டுப்பணம் | 5,447,164 | 4,665,618 | 2,788,716 | 4,665,618 | 17 | 17 |
| மீள்காப்புறுதிதாரர்களுக்காக செலுத்தப்பட்ட கட்டுப்பணம் | (599,084) | (601,022) | (107,963) | (601,022) | - | - |
| நிகர விண்ணப்பக் கணிப்பு கட்டுப்பணம் | 4,848,080 | 4,064,596 | 2,680,753 | 4,064,596 | 19 | 19 |
| ஈட்டப்படாத கட்டுப்பணத்திற்கான ஒதுக்கீட்டின் நிகர மாற்றம் | (122,677) | (219,086) | | (219,086) | (44) | (44) |
| **ஈட்டிய நிகர கட்டுப்பணம்** | 4,725,403 | 3,845,510 | 2,680,753 | 3,845,510 | 23 | 23 |
| **ஏனைய வருமானம்** | | | | | | |
| தேறிய உரிமைக் கொடுப்பனவுகள் | 871,049 | 824,015 | 705,571 | 816,876 | 6 | 7 |
| தேறிய தேறத்தக்க இலாபம் | 30,025 | 108,823 | 22,512 | 105,785 | (72) | (72) |
| நியம பெறுமதிகளின் தேறிய இலாபம் | 16,583 | 99,281 | 4,028 | 99,281 | (83) | (83) |
| கட்டணங்கள் மற்றும் தரகு வருமானம் | 122,552 | 123,425 | 51,000 | 123,425 | (1) | (1) |
| ஏனைய வருமானம் | 8,943 | 12,366 | 15 | 12,366 | (28) | (28) |
| | 1,049,152 | 1,167,910 | 783,126 | 1,157,733 | (10) | (9) |
| **தேறிய வருமானம்** | 5,774,555 | 5,013,420 | 3,463,879 | 5,003,243 | 15 | 15 |
| **தேறிய உரிமை கொடுப்பனவுகள்** | | | | | | |
| தேறிய காப்புறுதி நன்மைகளும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளும் | (1,984,358) | (1,528,233) | (299,271) | (1,528,233) | 30 | 30 |
| செலுத்தப்பட வேண்டிய காப்புறுதி ஈடுகளின் தேறிய மாற்றம் | (133,431) | (44,871) | 18,776 | (44,871) | 197 | 197 |
| ஆயுள் காப்புறுதி கோட்பாட்டு நிதியத்தில் ஏற்பட்ட மாற்றம் | (1,462,100) | (1,192,273) | (1,462,100) | (1,192,273) | 23 | 23 |
| ஏனைய செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகள் | (1,363,757) | (1,303,710) | (735,521) | (1,303,130) | 5 | 5 |
| விண்ணப்பக்கணிப்பு மற்றும் நிகரக் கொள்வனவுச் செலவு | (632,107) | (474,826) | (510,961) | (474,826) | 33 | 33 |
| காப்புறுதி தொடர்பான வேறு செலவுகள் | (29,029) | (30,924) | (17,774) | (30,924) | (6) | (6) |
| **மொத்த நன்மைகள், இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய செலவுகள்** | (5,604,782) | (4,574,837) | (3,006,851) | (4,574,257) | 23 | 23 |
| வரிக்கு முந்திய இலாபம் | 169,773 | 438,583 | 457,028 | 428,986 | (61) | (60) |
| வருமான வரிச் செலவுகள் | (27,571) | (20,857) | (29,383) | (19,267) | (232) | (243) |
| **ஆண்டிற்கான இலாபம்** | 197,344 | 417,726 | 427,645 | 409,719 | (53) | (52) |
| **முழுமையான பிறவருமானம்** | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | (87,480) | 116,815 | (80,350) | 113,710 | (175) | (177) |
| - வருமான கூற்றுக்கு மாற்றப்பட்ட தேறப்பட்ட வருமானங்களும் இழப்புக்களும் | (19,242) | (69,722) | (20,218) | (66,684) | (72) | (71) |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் | 97,098 | (44,930) | 97,098 | (44,930) | (316) | (316) |
| தொடர்பான வரி | 1,286 | | | | | |
| வரையறுத்த நன்மை திட்டதின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | (2,270) | (995) | (3,216) | (995) | 128 | 128 |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | (10,608) | 1,168 | (6,686) | 1,101 | (1,008) | (1,063) |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானம்** | 186,736 | 418,894 | 420,959 | 410,820 | (55) | (55) |
| **ஒதுக்கப்பட்ட இலாபமாக;** | | | | | | |
| நிறுவன உரிமையாளர்களுக்காக | 197,344 | 417,726 | - | | (53) | - |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்காக | - | - | - | | - | - |
| **ஆண்டிற்கான இலாபம்** | 197,344 | 417,726 | - | | (53) | |
| **ஒதுக்கப்பட்ட மொத்த முழுமையான பிறவருமானம்** | | | | | | |
| நிறுவன உரிமையாளர்களுக்காக | 186,736 | 418,894 | - | | (53) | |
| கட்டுபாட்டில் அல்லா உரிமையாளர்களுக்காக | - | - | - | | - | |
| **ஒதுக்கப்பட்ட மொத்த முழுமையான பிறவருமானம்** | 186,736 | 418,894 | | | (53) | |
| **பங்கொன்றிற்கான உழைப்பு** | | | | | | |
| - பங்கொன்றிற்கான அடிப்படை உழைப்பு (ரூ.) | 3.95 | 8.35 | 8.55 | 8.19 | (53) | (52) |
| - பங்கொன்றிற்கான நீர்த்த உழைப்பு (ரூ.) | - | - | 2.00 | 3.75 | | |

## HNB ASSURANCE PLC

### உரிமைமாற்றல் கூற்று

*31ஆம் திகதி மார்கழி 2015 முடிவடைந்த ஆண்டிற்கான*

| | கூறப்பட்ட மூலதனம் | வருமான ஒதுக்கீடுகள் | விற்பனைக்காக தயாராகவுள்ள ஒதுக்கீடுகள் | ஏனைய ஒதுக்கீடுகள் | ஆயுட்காப்புறுதிதாரருக்கான ஒதுக்கப்பட்ட நிதியம் | மொத்த பங்குதாரர் உரிமைகள் |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 | ரூ.'000 |
| **01.01.2014 உள்ளபடி நிலுவை** | 1,171,875 | 941,820 | 1,427 | 2,172 | (4,182) | 2,113,112 |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள் | | | | | | |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 417,726 | - | - | - | 417,726 |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | - | - | 47,093 | - | - | 47,093 |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் | - | - | (44,930) | - | | (44,930) |
| வரையறுத்த நன்மை திட்டதின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | | | | (995) | | (995) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | - | - | 2,163 | (995) | - | 1,168 |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 417,726 | 2,163 | (995) | - | 418,894 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாட்டபட்டது | | | | | 44,930 | 44,930 |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 2013 ஆம்ஆண்டிற்கான | - | (162,500) | - | - | - | (162,500) |
| உபநிறுவனத்திற்கான பங்கு விநியோக செலவுகள் | | (500) | | | | (500) |
| **கம்பனி உரிமையாளர்களுகான மொத்த பங்கீடு** | - | (163,000) | - | - | 44,930 | (118,070) |
| **31.12.2014 உள்ளபடியான நிலுவை** | 1,171,875 | 1,196,546 | 3,590 | 1,177 | 40,748 | 2,413,936 |
| | | | | | | |
| **01.01.2015 உள்ளபடி நிலுவை** | 1,171,875 | 1,196,546 | 3,590 | 1,177 | 40,748 | 2,413,936 |
| அதி ஈட்ட வரிக் கொடுப்பனவு | | (31,378) | | | | (31,378) |
| **ஆண்டிற்கான மொத்த முழுமையான வருமானங்கள்** | | | | | | |
| ஆண்டிற்கான இலாபம் | - | 197,344 | - | - | - | 197,344 |
| ஆண்டிற்கான முழுமையான பிறவருமானங்கள் | | | | | | |
| - நியமப் பெறுமதியின் தேறிய மாற்றம் நிதிச் சொத்து | - | - | (105,436) | - | - | (105,436) |
| - விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் - ஆயுள் நிதி | - | - | 97,098 | - | | 97,098 |
| வரையறுத்த நன்மை திட்டதின் மூலமான கணிப்பீட்டு வருவாய் | | | | (2,270) | | (2,270) |
| ஆண்டிற்கான மொத்த முழுமையான பிறவருமானம் | - | - | (8,338) | (2,270) | - | (10,608) |
| **ஆண்டிற்கான இலாபம்** | - | 197,344 | (8,338) | (2,270) | - | 186,736 |
| விற்பனைக்காக தயாராகவுள்ள நிதிச் சொத்துக்களில் நியமப் பெறுமதியில் ஏற்பட்ட தேறிய மாற்றம் ஆயுள் காப்புறுதி உரிமையாளர் ஒதுக்க நிதிக்கு மாட்டபட்டது | | | | | (97,098) | (97,098) |
| **உரிமையாளர்களின் உரிமையில் நேரடியாக பதிவு செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் - 2014 ஆம் ஆண்டிற்கான | - | (187,500) | - | - | - | (187,500) |
| உபநிறுவனத்திற்கான பங்கு விநியோக செலவுகள் | | (750) | | | | (750) |
| **நிறுவன உரிமையாளர்களுகான மொத்த பங்கீடு** | - | (188,250) | - | - | (97,098) | (285,348) |
| **31.12.2015 உள்ளபடியான நிலுவை** | 1,171,875 | 1,174,262 | (4,748) | (1,093) | (56,350) | 2,283,946 |

# HNB ASSURANCE PLC

## காசுப்பாய்ச்சல் கூற்று

| *31ஆம் திகதி மார்கழி 2015 முடிவடைந்த ஆண்டிற்கான* | குழுமம் 2015 | குழுமம் 2014 ரூ.'000 | கம்பனி 2015 | கம்பனி 2014 ரூ.'000 |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வரிகளுக்கு முந்திய இலாபம் | 169,773 | 438,583 | 457,028 | 428,986 |
| *சீராக்கங்கள்* | | | | |
| வட்டி வருமானம் | (843,579) | (808,970) | (687,104) | (801,831) |
| பங்கு வருமானம் | (27,470) | (15,045) | (18,467) | (15,045) |
| அருவச்சொத்து அழிப்புக்கள் | 17,226 | 17,975 | 17,226 | 17,975 |
| பெறுமானத்தேய்வு | 51,116 | 40,330 | 38,082 | 40,330 |
| ஊழியர் நன்மை நிதி ஏற்பாடு | 22,201 | 19,050 | 12,849 | 19,050 |
| நியமப் பெறுமதியின் தேறிய இழப்புக்கள் | (16,583) | (99,281) | (4,028) | (99,281) |
| தேறிய தேறத்தக்க இலாபம் | (30,025) | (108,823) | (22,512) | (105,785) |
| மாற்றமான சொத்துக்களின் மீதான தேறாத இலாபம் | (3,523) | - | (3,523) | - |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண விற்பனையில் ஏற்பட்ட நட்டம் / இலாபம் | (46) | 174 | (15) | 174 |
| | (660,910) | (516,007) | (210,464) | (515,427) |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம் | 65,699 | (299,620) | (24,825) | (299,110) |
| தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம் | 1,812,602 | 1,608,263 | 1,533,751 | 1,608,263 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல் | 1,217,391 | 792,636 | 1,298,462 | 793,726 |
| வழங்கப்பட்ட பணிக் கொடுப்பனவு | (14,963) | (5,189) | (11,292) | (5,189) |
| வருமான வரிக் கொடுப்பனவு | (1,280) | - | - | - |
| அதி ஈட்ட வரிக் கொடுப்பனவு | (31,378) | - | (31,378) | - |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்ச்ல் | 1,169,770 | 787,447 | 1,255,792 | 788,537 |
| **முதலீட்டு செயற்பாடுகளின் ஊடாக காசுப் பாய்ச்சல்** | | | | |
| முதலீட்டு பங்குகளின் தேறிய கொள்வனவு | (1,442,522) | (1,148,749) | (1,294,693) | (1,047,491) |
| பெற்ற வட்டி | 711,684 | 591,459 | 568,571 | 586,583 |
| பெற்ற பங்கிலாபம் | 27,198 | 15,228 | 18,467 | 15,228 |
| உப நிறுவனத்தின் மீதான முதலீடுகள் | - | - | (150,000) | (100,000) |
| அருவச் சொத்து கொள்வனவு | (10,789) | (15,790) | (10,789) | (15,790) |
| ஆதனம், பொறி உபகரணம் கொள்வனவு | (53,596) | (37,747) | (39,679) | (37,747) |
| ஆதனம், பொறி உபகரணம் அகற்றல் பெறுவனவு | 189 | 310 | 146 | 310 |
| முதலீட்டு செயற்பாட்டிற்கான பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | (767,836) | (595,289) | (907,977) | (598,907) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலான காசுப் பாய்ச்ச்ல்** | | | | |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | (187,500) | (162,500) | (187,500) | (162,500) |
| உபநிறுவனத்திற்கான பங்கு விநியோக செலவுகள் | (750) | (500) | - | - |
| நிதியிடல் நடவடிக்கைகளிலான தேறிய காசு | (188,250) | (163,000) | (187,500) | (162,500) |
| **தேறிய காசு மற்றும் காசுக்கு சமனானவையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு** | 213,684 | 29,158 | 160,315 | 27,130 |
| வருட ஆரம்பத்திலுள்ள காசு மற்றும் காசுக்கு சமனானவை | 173,245 | 144,087 | 171,217 | 144,087 |
| HNB GI பிரிவு படுத்தலினால் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட மாற்றம் | - | - | (73,310) | - |
| **வருட முடிவிலுள்ள காசு மற்றும் காசுக்கு சமனானவை** | 386,929 | 173,245 | 258,222 | 171,217 |
| **காசுப்பாய்ச்சல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்** | | | | |
| **(அ) தொழிற்பாட்டு சொத்துக்களின் மாற்றம்** | | | | |
| பிற்போடப்பட்ட கொடுப்பனவில் ஏற்பட்ட அதிகரிப்பு | (13,863) | (19,160) | - | (19,160) |
| ஆயள்காப்புறுதிதாரருக்கான கடன் அதிகரிப்பு | (20,910) | (17,426) | (20,910) | (17,426) |
| மீள்காப்புறுதி நிலுவைகள் அதிகரிப்பு | 20,906 | (56,870) | (10,823) | (56,870) |
| கட்டுப்பண நிலுவைகளின் அதிகரிப்பு | 18,135 | (62,869) | 1,351 | (62,869) |
| ஏனைய சொத்துக்களின் அதிகரிப்பு | 61,431 | (143,295) | 5,557 | (142,785) |
| | 65,699 | (299,620) | (24,825) | (299,110) |
| **(ஆ) தொழிற்பாட்டு பொறுப்புக்களின் மாற்றம்** | | | | |
| ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பு / குறைவு | 79,916 | 116,172 | 82,693 | 116,172 |
| காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் அதிகரிப்பு - ஆயுள் அல்லாதது | 267,127 | 268,036 | - | 268,036 |
| காப்புறுதி கோட்பாட்டு பொறுப்புக்கள் அதிகரிப்பு - ஆயுள் காப்புறுதி | 1,444,432 | 1,214,158 | 1,444,432 | 1,214,158 |
| மீள் காப்புறுதி கடன்பட்டோரின் அதிகரிப்பு | 21,127 | 9,897 | 6,626 | 9,897 |
| | 1,812,602 | 1,608,263 | 1,533,751 | 1,608,263 |
| **(இ) காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு /குறைவு** | | | | |
| வருட முடிவிலுள்ள நிகர காசு மற்றும் காசுக்கு சமனானவை | 386,929 | 173,245 | 258,222 | 171,217 |
| வருட ஆரம்பத்திலுள்ள நிகர காசு மற்றும் காசுக்கு சமனானவை | 173,245 | 144,087 | 171,217 | 144,087 |
| HNB GI பிரிவு படுத்தலினால் காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட மாற்றம் | - | - | (73,310) | - |
| பிரிப்படுத்தலுக்கு பிற்பாடு வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவை | - | - | 97,907 | - |
| காசு மற்றும் காசுக்கு சமனானவைகளில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு / குறைவு | 213,684 | 29,158 | 160,315 | 27,130 |